IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II SRIVILLIPUTTUR
**CC. No.389/2022**

**Cross PW - 1**

Name: **திரு.உத்தமராஜா**

S/o : **சண்முகவேல்**

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of April 2026.

27.04.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

என்மீது ஏற்கனவே எதிரியால் புகார் கொடுக்கப்பட்டு வழக்க பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும் இவ்வழக்கின் எதிரியும் உடன்பிறந்த அண்ணன் தம்பி என்றால் சரிதான். மேற்படி இவ்வழக்கின் எதிரி என்மீது கொடுத்த வழக்கில் சமரசம் ஆகிவிட்டதாக அவர் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி எதிரி கல்லை எறிந்தபோது எனக்கோ அல்லது எனது ஆட்டோவில்வந்த பயணிகளுக்கோ காயம் ஏற்பட்டதாக எனது முதல் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் எனது ஆட்டோவில் பயணிகள் யாரும் இல்லை. நான் மட்டும் தான் வந்துகொண்டிருந்தேன். எனக்கு காயம்பட்டதாக நான் சாட்சியம் அளிக்கவில்லை. புகார்மனுவை காவல்நிலையத்தில் வைத்து ஒரு நபர் எனக்கு எழுதி கொடுத்தார். எனக்கும் இவ்வழக்கின் எதிரிக்கும் வாகனம் சம்மந்தமாக ஏற்பட்ட பிரச்சனை தொடர்பான வாகனத்தின் ஆர்சி புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மேற்படி வாகனமானது எதிரியின் பெயரில் இருப்பதால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி எதிரியும் நானும் டிராவல்ஸ் வைத்து நடத்தி வந்தோம். மேற்படி வாகனத்திற்கு முதல் நான் தான் கொடுத்தேன். ஆனால் அந்த சமயத்தில் என்னிடம் ஆதார் கார்டு, லைசன்ஸ் போன்றவை இல்லாததால் எதிரி பெயரில் வாகனத்தை வாங்கினோம். வாகனத்திற்கு பைனான்ஸ் போட்டால் பைனான்ஸ் தொகை கட்டி முடிக்கும் வரை பைனான்ஸில் தான் ஆர்சிபுத்தகம் இருக்கும் என்றால் சரிதான்.

போலீசார் விசாரணையில் மேற்படி பைனான்ஸ் தொகையை கட்டி முடித்ததற்கான ரசீதோ பைனான்ஸ் கிளியரன்ஸ் சான்றோ போலீசார் விசாரணையின்போது கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வன்னியம்பட்டி விலக்கில் மேற்படி ஆட்டோவிற்கு முழு சர்வீஸ் செய்ததற்கான பில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்தின் கண்ணாடியின் சேத மதிப்பிற்குரிய ரசீது தான் போலீசாரிடம் வாங்கிகொடுத்தேன். மேற்படி கண்ணாடியின் மதிப்பு குறித்து ரசீது வாங்கப்பட்டது ஒர்க்ஷாப் கடை என்றால் சரிதான். மேற்படி நான் கூறியவாறு எந்த சம்பவமும் எந்த தேதியிலும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.